முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 210 ஆங்கீரச ஆனி 10 (24 . 06 1992) புதன

யாழ் மாவட்டத்திற்கு இனிமேல் மேலதிக அரச அதிபர் இல்லை

அரசின் புதிய நிர்வாகத் திட்டத்தின்படி யாழ் மாவட்டத்திற்கு மேலதிக அரசாங்க அதிபர் இனிமேல் தேவையில்லை என வடக்கு கிழக்கு மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனாலேயே யாழ் மேலதிக அரச அதிபராக பணிபுரிந்தவர் திருகோணமலைக்கு மாகாணசபை அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன இதேபோல நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேலதிக அரச அதிபர் பதவிகள் இல்லாமல் போவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

அரசின் புதிய கல்வி தரப்படுத்தலை கண்டித்து நாளை நகரில் பேரணி

மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் பங்குபற்றுவர்

1990 ஆகஸ்ட் க. பொ. த. உயர்தரப் பரீட்சை, 1991 ஏப்ரலில் வடக்கில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை என்பனவற்றை பல்கலைக்கழக அனுமதி முறையில வெவ்வேறாக கருதப்படும் என உயர் கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதைக் கண்டித்து நாளை யாழ் நகரில் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளது,

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் இந்த ஊர்வலத்தை நடத்துகின்றனர்.

இவ் ஊர்வலம் யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து காலை ஆரம்பமாகி பிரதான முக்கிய வீதிகளூடாக சர்வதேச செஞ்சிலுவைக் குழு அலுவலகம், செயலகம் ஆகிய இடங்களுக்குச் சென்று மகஜர்கள் கையளிக்கப்படும்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

பாடசாலைகளின் உயர்தர மாணவர்கள், பரீட்சை எடுத்த மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்

04 ஆம் பக்கம் பார்க்க

ஹெலி நோட்டம்

நேற்று காலை 11 மணி முதல் நண்பகல் 2 மணி வரை சாவகச்சேரிப் பகுதியில் பல தடவைகள் ஹெலிகப்டர் ஒன்று வட்டமிட்டது.

இது இரண்டு தடவைகள் சுட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 53

சுன்னாகத்தில் குண்டு வீச்சு மூவர் காயம், வீடுகள் சேதம்

வலிகாமம் வடக்கு பகுதிக்கு நேற்று மாலை 5-30 மணியளவில் திடீரென வந்த இரு பொம்மர்கள் பல தடவைகள் வட்டமிட்டு சுன்னாகத்தில் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

சுன்னாகம் - கந்தரோடை செல்லச்சியம்மன் வீதிப் பகுதியில் இரு குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் மூவர் படுகாயமடைந்தனர் ஐந்து வீடுகள் சேதமடைந்தன.

விமானங்கள் பல தடவைகள் வட்டமிடுவதைக் கண்டதும் இப்பகுதியில் கடைகள் மூடப்பட்டன வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்தது 07

கொழும்பில் நடைபெற்ற அன்னையரின் பெரும் பேரணி

தெற்கில் ஜே. வி. பி. நடவடிக்கை காலங்களின் போது அரச படைகளினால் காணாமற் போனவர்களின் அன்னையர்கள் ஆயிரக்கணக்கானோர் நடத்திய பேரணி நேற்று கொழும்பில் திட்டமிட்டபடி நடைபெற்றது.

அன்னையர் முன்னணித் தலைவரும் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்சாவின் தாயாருமான திருமதி மனோராணி சரவணமுத்து பேரணியில் உரையாற்றிய போது ''கட்டுத்தலை கொடுமைகளுக்கு நீதிவழங்க வேண்டிய காலம் வந்துவிட்டது'' என்றார்.

இப்பேரணியில் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டார்.

முன்னதாக கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து பேரணியாக முகத்துவாரம் காளி தேவி கோயிலுக்கு சென்ற அன்னையர் அங்கு தமது காணாமற் போன அன்புக்குரியவர்களுக்காக பிரார்த்தனைகளையும் தவ பூஜைகளையும் செய்தனர்.

இச்சம்பவங்கள் நடைபெற்றபோது ஜனாதிபதி பிரேமதாஸ மொனராகலை 14 ஆம் கிராமோதய விழாவில் கலந்து கொண்டிருந்தார்.

பல்கலைக்கழக அனுமதி அரசுக்கு எதிராக வழக்கு

1990 ஆகஸ்ட், 1991 ஏப்ரல் மாதங்களில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர பரீட்சைகளின் புள்ளிகளை பல்கலைக்கழக அனுமதிக்கு அரசு வேறுபடுத்தியிருப்பதை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அடுத்த மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பாடசாலைகளின் ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்தன. 22,15

பேராசிரியர் ஷோல்க் அடுத்த மாதம் யாழ் வருவார்

சுவீடன் உப்சலா பல்கலைக்கழகப் பேராசிரியர் பீற்றர் ஷோல்க் அடுத்த மாதம் 17 ஆம் திகதி யாழ் வரவுள்ளார்.

யாழ் பல்கலைக்கழக கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதும் தமிழர் இனப்பிரச்சினை தொடர்பாக தீர்வை வலியுறுத்துவதுமே இவரது விஜயத்தின்

— 4 ஆம் பக்கம் பார்க்க

மணலாறை ராணுவமயமாக்கவே மீண்டும் மீண்டும படையெடுப்பு

தமிழீழத்தின் கேந்திர இலக்காக கருதப்படும் மணலாறை கைப்பற்ற ஸ்ரீலங்கா கடந்த 2 வருடங்களில் 3 பெரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு தோல்வி கண்டுள்ளது.

மணலாறு யுத்தங்களில் 400 படையினர் பலியாகியிருப்பதாகவும் சுமார் 275 புலிப் போராளிகள் வீரச்சாவு எய்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் எடுத்த இராணுவ நடவடிக்கையில் அலம்

—04 ஆம் பக்கம் பார்க்க

அரசியல் தீர்வை என்றுமே சிங்கள பேரினவாதம் தரமாட்டாது

வடக்கு கிழக்கு இணைப்பை நிராகரித்து இருமாகாணங்கள் தனித்தனியாக இயங்குவதை குறிக்கும் தீர்வே இனப்பிரச்சனைக்கு தெரிவுக்குழு இறுதியாக இப்போது முன்வைத்திருக்கும் தீர்வுத்திட்டமாகும்.

இது தமிழரின் அடிப்படை கோரிக்கையைக் கூட இங்கவ

—04 ஆம் பக்கம் பார்க்க

இந்திய விமானபடை விமானத்தில் வெடிகுண்டுப் புரளி

நேற்றுக்காலை சென்னை விமான நிலையத்திலிருந்து புதுடில்லி புறப்படத் தயாரான விமானத்தில் குண்டு வைக்கப்பட்டதாக வெளியான செய்தியினால் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

—04 ஆம் பக்கம் பார்க்க

தமிழீழத்தை 3 வலயங்களாக பிரிப்பதே இராணுவ நோக்கம்

தமிழீழப் பகுதியை மூன்று இராணுவ வலயங்களாக பிரித்து படிப்படியாக ஒவ்வொரு வலயத்தினுள்ளும் பலப் பிரயோகம் செய்து புலிகளை அழித்து தமிழ் தேசியத்தின் முதுகெலும்பை உடைக்க ஸ்ரீலங்கா படைகள் திட்டமிட்டுள்ளதாக ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகையில் தகவல் தரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி வட, தென்தமிழீழங்களை இணைக்கும் மணலாறு பகுதியையும் குடாநாட்டை வன்னியுடன் இணைக்கும் கொம்படிப் பகுதியையும் கைப்பற்றி தமிழீழத்தை 3 ஆக பிரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதாவது தென் தமிழீழம் (கிழக்கு) ஒரு வலயம், வன்னி மன்னார் ஒரு வலயம், குடாநாடு மற்றுமோர் வலயம் ஆக வைத்திருக்க இராணுவ உயர் மட்டம் திட்டமிட்டுள்ளது.

இந்த இராணுவ திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டால் இன்று அரசியல் அரங்கில் அடிபடும் வடக்கு கிழக்கு இணைப்பு என்ற பேச்சையே இல்லாமற் செய்ய

— 4 ஆம் பக்கம் பார்க்க

பாதிக்கப்பட்டவர்களுக்குரிய அரசின் உதவி கிடைக்கவில்லை

1983ஆம் ஆண்டு ஆடி மாதத்திலிருந்து ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளின் போது வடமாகாணத்தில் இறந்த, காயமடைந்த, மற்றும் ஊனமுற்றவர்களுக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்படும் உதவித்தொகை முழுமையாக கிடைக்கவில்லை என புள்ளி விவரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக புனர்வாழ்வு அமைச்சு யாழ். மாவட்டத்துக்கு 10 மில்லியன் ரூபாவை வழங்கியதாகவும், அது கொடுப்பனவு செய்யப்பட்டு விட்டதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பாதிக்கப்பட்டவர்களில்

4 ஆம் பக்கம் பார்க்க

★ கடந்த 3 வருடங்களில் பயன்படுத்தப்படாது

திறைசேரி திரும்பிய நிதி மீளவும் கிடைக்கும்!

கடந்த மூன்று வருடங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சின் பேரில் மாவட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மீதமாக உள்ள 31 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை இந்த வருடத்தில் செலவு செய்ய நடவடிக்கையெடுக்கப்படுகிறது.

எம். பி. க்களால் சிபார்சு செய்யப்படும் மாவட்ட அடிப்படையிலான மூலதன திட்டங்களை செயற்படுத்தும் பொருட்டு 1989, 1990, 1991 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் வருட இறுதியில் செலவிடப்படாத ஒதுக்கீடுகளை மீண்டும் செலவிடுவதை மந்திரிசபை அங்கீகரித்துள்ளது.

பயன் படுத்தப்படாத இந்த நிதி திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

உதவி அரச அதிபர் பிரிவுதோறும் தனியார் பஸ் சங்கங்கள்

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், உதவி அரசாங்க அதிபர்கள் தலைமையில் தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்கள், மேல் மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட உள்ளன.

இச்சங்கத்தில் பஸ் சொந்தக்காரர், சாரதிகள், நடத்துநர்கள், பொது மக்கள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

கடும் காற்று, வெப்பம்; கண்நோய் தீவிரமாக பரவுகிறது!

தற்போதைய கடும் வெப்பத்தினாலும், காற்றினாலும் யாழ்ப்பாணத்தில் கண்நோய் தீவிரமாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கண்நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் பலர் தினமும் வைத்தியசாலைகளுக்கு சென்று சிகிச்சை பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

அகதி முகாம்களில் கண்நோய், வயிற்றோட்டம் என்பன பரவிவிடாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை யாழ் மாநகர சுகாதார பிரிவு எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. 47

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசாமி கோவில் 1992 ஆம் ஆண்டு மகோற்சவ கால தற்காலிக சந்தைகள்.

01. நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலும்
02. பண்டார மாளிகை வளவில் தீயணைக்கும் சேவை நிலையத்திற்கு கிழக்குப் பக்கமாகவும்.

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 17. 07. 92 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12. 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்,

கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 50/= ஐயும் மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணையாக ரூபா 250/=ஐயும் செலுத்துவதன் பேரில் 16. 07. 92 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3. 00 மணி வரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப்படிவங்களில் (இணைப்பிரதிகளில்) கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 17. 07. 92 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல 12 00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

இக் கேள்விகள் சம்பந்தமான சகல விபரங்களையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
17. 06. 1992

06054

தீவக அணி வெற்றி பெற்றது

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம் அதன் 21 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு ஜெற்வைன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் பல போட்டிகளை நடத்தி வருகிறது.

இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் கொழும்புத்துறை மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் இடம் பெயர்ந்த தீவகமக்கள் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை ஒன்றிற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது. 16

'வைக்கிங்ஸ்' வெற்றி பெற்றது

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்பட்டு வரும் 1992 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப்போட்டிகளில் வலைபந்தாட்டப் போட்டியில் வைக்கிங்ஸ் விளையாட்டுக் கழக அணி சாம்பியன் ஆனது.

கடந்த வாரம் யாழ் தமிழ் கொன்வென்ற் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் 'வைக்கிங்ஸ்' விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்தாடிய குருநகர் 'யுத் காமல்' விளையாட்டுக் கழக அணியை 14:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஒரு புள்ளியால் வெற்றியீட்டியது. 16

வடமராட்சிபனைவளநிலையத்தில் 68 பேருக்கு பயிற்சி!

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வடமராட்சி ஸ்ரீ புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட பனைவளப் பயிற்சி நிலையத்தில் இதுவரை 68 பயிற்சியாளர்கள் பயிற்சியினை முடித்து வெளியேறியுள்ளனர்.

இதுவரை இரண்டு கட்டப் பயிற்சி நெறிகள் நடந்து முடிந்துள்ளன. கடந்தமாதம் ஆரம்பிக்கப்பட்ட மூன்றாவது கட்டப் பயிற்சி நெறியில் 11 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இரண்டாவது கட்டப் பயிற்சி மாணவர்களில் செல்வன் கு. தேவதாஸ் 1270 போத்தல்கள் பதனீரைக் கடந்த மாதம் உற்பத்தி செய்து 6 350/- ரூபாவையும், செல்வன் வி ராஜேஸ் கண்ணன் 1,076 போத்தல்கள் பதனீரை உற்பத்தி செய்து 5,380/- ரூபாவையும் வருமானமாகப் பெற்றுள்ளனர்.

பனைவளப் பயிற்சி நிலையத்தில் பனைத்தொழில் சம்பந்தமான பயிற்சிகள் 3 மாத காலத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கே. ஜி. பியின் அறிக்கை ஸ்ரீமாவோ பெயர் இருந்தது

1989 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது ஐ. தே. கட்சிக்கும் சுதந்திரக்கட்சிக்கும் முன்னாள் சோவியத் யூனியனின் உளவு ஸ்தாபனமான கே. ஜி. பி நிதியுதவி அளித்தது என ரஷ்ய ஜனாதிபதியின் கூற்றானது சோவியத் யூனியனில் இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்குக் கறையுண்டு பண்ணுவதற்கே என அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

"இப்படியான வெளிப்பாடுகளின் பின்னணியினை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வெளிப்பாடுகள் சிறிலங்கா மீதேயன்றி ஐ. தே. கட்சி மீது கொண்ட அன்பினால் செய்யப்பட்டதல்ல.

இந்தக்குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய முதல் ஆவணம் இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பினைப் பற்றிக் கூறப்பட்டது.

கே. ஜி. பி. உதவி செய்ததாகக் கூறப்படும் ஐ. தே. கட்சியினதும் சுதந்திரக் கட்சியினதும் நபர்களின் பெயர்களை இந்த ஆவணங்கள் வெளிப்படுத்தவில்லை.

திருமதி பண்டாரநாயக்காவினுடைய பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐ. தே. கட்சியைச் சார்ந்தவர்கள் மேல் நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது ஏனெனில் எமக்கு அவர்கள் பெயர்கள் தெரியாது" இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இது பற்றிக் கருத்துத்தெரிவித்த ஸ்ரீமாவோ "இது பெரும்முட்டாள்தனம், நான் சி. ஐ. ஏயிடமும் உதவி பெற்றேன் என்றும் இனிக் கூறுவார்கள் என்று கூறினார்.

பொலிஸாரின் மீது அரசு நம்பிக்கையிழக்கிறது

- குணவர்த்தன எம். பீ.

'பொலிஸாரின் மீது அரசு நம்பிக்கையை இழந்துவிட்டது இதனால்தான் அவர்களின் கடமைகள் தற்பொழுது பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன'

இவ்வாறு பாராளுமன்றத்தில் கூறினார் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தரான எம். கே. டி. எஸ். குணவர்த்தன எம். பி.

வானொலி ரூபவாஹினி நிலையங்களில் காவல் கடமைகளிலிருந்து பொலிஸார் அகற்றப்பட்டுள்ளதை தனது வாதத்திற்கு உதாரணமாகவும் காட்டினார் அவர்.

பொலிஸாரின் விசேட அலவன்ஸ் (பட்டா) தொடர்ந்தும் வழங்கப்படாமல் போனால் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தமொன்றில் ஈடுபடவும் அவர்கள் தயாராகிறார்கள் என்ற தகவலையும் குணவர்த்தன சபையில் வெளியிட்டார்.

★ நீதிபதிகள் முடிவு

கர்நாடகத் தமிழர் தாக்கப்பட்டதற்கு காவிரிப் பிரச்சினை காரணம் அல்ல!

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன் கர்நாடகத்தில் ஒரு இலட்சம் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களுக்கு காவிரிப் பிரச்சினையல்ல கர்நாடக அரசின் இனவெறிப் போக்கே காரணமென இச்சம்பவம் பற்றி பரந்த மதிப்பீட்டையும், விசாரணையையும் நடத்திய 'இந்திய மக்களின் மனித உரிமை நடுவர் மன்றம்' தெரிவித்துள்ளது,

முன்னாள் நீதிபதிகள் இருவர் இந்த நடுவர் மன்றத்தின் உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டனர்.

'தமிழர்களுக்குத் தண்ணீர் தருவதால் கர்நாடக விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மையானால் கர்நாடகத்தில் உள்ள தமிழ் விவசாயிகளும்தான் அப்போது பாதிக்கப்படுவார்கள், எனவே கர்நாடகத்தில் உள்ள தமிழர்களைத் தாக்குவதற்கு இதைக் காரணமாகக் காட்ட முடியாது.'

'கலவரத்திற்கு உண்மையான காரணம் கர்நாடக இனவெறியைத் தூண்டிவிட்டவர்கள்தான். அவர்கள் தான் யதார்த்த நிலையைப் பற்றிக் கவலைப்படாமல் சட்டத்தை மதிக்காமல் பொறுப்பற்ற முறையில் பேசி குறுகிய இனவெறியைத் தூண்டிவிட்டார்கள். கலவரம் வெடித்ததற்கு இது தான் அடிப்படையான காரணம்.'

'கலவரம் நடந்ததற்கு உடனடிக் காரணமாக அமைந்தது 13 12 91 இல் கர்நாடக அரசு நடத்திய முழு அடைப்புப் போராட்டம். அரசே முழு அடைப்புப் போராட்டத்தை நடத்துவது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது. அரசு தனது கடமைகளைச் செய்யாமல் நிறுத்தி வைப்பதன் மூலம் அரசியல் சட்டப்படி தனக்கு உள்ள பொறுப்புகளைக் கைவிட்டு நழுவ முடியாது. அரசியல் சட்ட நிலை இப்படி இருந்தபோதும் கர்நாடக அரசு முழு அடைப்பு நடத்தியது. இது கலவரத்துக்கான உடனடிக் காரணமாக அமைந்தது' என 'இந்திய மக்களின் மனித உரிமை நடுவர் மன்றம்' தனது தீர்ப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறுவிளம்பரம்

சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்ப பிரச்சினை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர்.

06050

யாழ்ப்பாணம்

சரக்குக் கப்பல்களை விற்பதற்கு முடிவு!

இலங்கை தன்வசமுள்ள இரண்டு பெரிய சரக்குக் கப்பல்களையும் விற்பனை செய்யவுள்ளது

இக்கப்பல்கள் நஷ்டத்தில் இயங்குவதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாம்.

இவற்றின் சேவைகள் வாடகைக் கப்பல்களின் மூலம் நிறைவேற்றப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல் மீண்டும் ஆரம்பம்!

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் நாய்களுக்கு விசர்நோய் வராமல் தடுப்பதற்கான தடுப்பூசி போடும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

நேற்று முன்தினம் மட்டும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்களுக்கு இந்த தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்திருக்கும் குமண கப்பலில் இந்தத் தடுப்பூசி மருந்து கொண்டு வரப்பட்டதாகவும் அவ்வட்டாரம் தெரிவித்தது (47(

போராடுவதன் மூலமே இன்று உரிமையைப் பெற முடியும்

- அமைச்சர் செல்லச்சாமி

எத்தனையோ போராட்டங்கள் நடத்தி உயிர், உடமைகளை இழந்து இரத்தம் சிந்தியே தமிழை அரசகரும மொழியாக்க முடிந்தது. ஆனால் அந்த தமிழ் மொழி அமுலாக்கம் சீராக நடைபெறவில்லை இதனால் இன்று பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன இவற்றைப் போராடியே நீக்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுளளது

தமிழ் மொழி அமுலாக்கலுக்கென தனியான ஆணைக்குழு வென்று இயங்கிவருகிறது எனினும் சில அமைச்சுக்கள் திணைக்களங்களிலிருந்தும் தமிழ் மக்களுக்கு இன்னமும் சிங்களத்திலேயே கடிதங்கள் அனுப்பிவைக்கப்படுகின்றன.

இவ்வாறு இக்காலத்தில் வரும் கடிதங்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவையாக, பணம் சம்பந்தப்பட்டவையாகஇருப்பினும் அவற்றை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும், அமைச்சுக்களுக்கும் திருப்பி அனுப்பும் தன்மான உணர்வு எமக்கு ஏற்பட்டால் மட்டுமே இதில் நாம் வெற்றி பெற முடியும்

கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழா வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேலுள்ள கருத்தைத் தெரிவித்தார் இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி

அகதி முகாமில் தீ! 210 பேரின் உடமைகள் நாசம்

அக்கரைப்பற்று - ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் ஒன்றான பனங்காடு அகதி முகாம் தீப்பிடித்து முற்றாக நாசமாகியுள்ளது.

இந்த முகாமில் கடந்த இருவருடங்களாக வசித்து வந்த 52 குடும்பங்களைச் சேர்ந்த 210 அகதிகள் உடமைகள் அனைத்தையும் இத் தீவிபத்தினால் இழந்துள்ளனர்.

காரைதீவிலிருந்து வெளியேற அதிரடிப் படையின் அனுமதி தேவை!

காரைதீவிலிருந்து மட்டக்களப்பு மற்றும் தூர இடங்களுக்கு வேலையின் நிமித்தம் செல்வோர் காரைதீவிலுள்ள விசேட அதிரடிப் படையினரின் அனுமதி பெற வேண்டுமென முகாம் பொறுப்பதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே அதிரடிப் படையினரின் உத்தரவுப் படி இப்பகுதியில் வசிவோர் அனைவரும் விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்திய உயர்மட்டக் குழு இவ்வாரம் கொழும்பு வரும்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் முக்கிய சந்தேக நபர்களைப் பிடித்து இந்தியாவிடம் ஒப்படைக்குமாறு இலங்கையிடம் உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடவென இந்திய உயர்மட்டக் குழுவொன்று இவ்வாரத்துள் கொழும்பு வரவுள்ளது.

இக்குழு கொழும்பில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தி அதன் பின்னர் ஒப்படைப்பு பற்றிய கோரிக்கையை விடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜே.ஓ.சி. குண்டு வெடிப்பு; அறுவர் மீது வழக்கு!

ஆறு பேருக்கு எதிரான ஜே. ஓ. சி. குண்டு வெடிப்பு வழக்கு அடுத்த மாதம் 17 ஆம் திகதி கொழும்பு 4 ஆம் இலக்க மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அன்றையதினம் சந்தேக நபர்களிடம் குற்றப்பத்திரிகை கையளிக்கப்படவுள்ளது.

நவனீசுமி கதிரவேலு என்ற இந்திரா, சாந்தினி சிவலோகநாதன், சுமதி விஜயகுமாரி, அருணாசலம் சுரேந்திரன் என்ற சஹிட், இராசையா நடராஜா, சிதம்பரம் செல்லத்துரை என்ற பாரசவ ஆகியோர் மீது இவ் வழக்கில் மொத்தம் ஏழு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

★ விசேட பரீட்சைகள் எதுவுமே இனி இல்லை

கிராம அலுவலர் தெரிவுப் பரீட்சை மீளவும் நடைபெறாது!

கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை மீளவும் யாழ் மாவட்டத்தில் நடத்தப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 13 ஆம் திகதி யாழ் மாவட்டம் தவிர்ந்த நாட்டின் ஏனைய சகல பகுதிகளிலும் இப்பரீட்சை நடத்தப்பட்டு இருந்தது

யாழ். குடாப் பகுதியினுள் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப் பள்ளி பகுதி விண்ணப்பதாரிகளுக்கான போட்டிப் பரீட்சை கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் தகுந்த முன்னேற்பாட்டினால் எவ்வித தடையுமின்றி அன்றைய தினம் யாழ். மாவட்டத்தினுள் அமைந்துள்ள கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடத்தப்பட்டிருந்தது

கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்குரிய பரீட்சை அனுமதிப் பத்திரங்களும் கல்விப் பணிப்பாளரினால் முற்கூட்டியே தபாலில் அனுப்பப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

விசேட பரீட்சைகள் எதனையும் இனி வடக்கு கிழக்கில் நடத்துவதில்லை என அரசு எடுத்துள்ள புதிய முடிவிற்கமையவே ஏற்கனவே நடத்தப்படாது போன இப்பரீட்சை இனி இங்கு நடைபெறாது எனவும் தெரிவிக்கப்படுகிறது

விசேட பரீட்சைகள் எதுவும் இனி நடத்தப்படமாட்டாது எனவும் ஒரு முறை பரீட்சை நடைபெற்றால் வழமைப் பிரகாரம் அடுத்த முறை நடைபெறும் பரீட்சைக்கே அப்பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டுமெனவும் உயர்கல்வி அமைச்சர் ஹமீட் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வீரபத்திரசிவன் மஹோற்சவம்

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன்கோவில் வருடாந்த மஹோற்சவம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது

தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன (18)

கோப்பாயில் மஹோற்சவம்

கோப்பாய் ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவில் மஹோற்சவம் 27 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

ஜூலை மாதம் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு இரதோற்சவமும், 6 ஆம் திகதி காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் 11 ஆம் திகதி மாலை பெரும் பொங்கல், வைரவர் உற்சவமும் இடம் பெறும்.

உற்சவ காலங்களில் தினமும் மாலை 7மணிக்கு ஈழநல்லூர் தமிழ்மணி சுப கணேச சுந்தரத்தின் தொடர் இசைச் சொற்பொழிவு இடம் பெறும்.

மாணிக்கவாசகர் குருபூசை

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 4 ஆம் திகதி சனி கிழமை மணிவாசகர் குருபூசை விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது (18)

மகோற்சவம்

அளவெட்டி வடக்கு நவக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் 22

அரச அதிபர்கள் கூட்டம்

வட, கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று அடுத்த யூலை மாதம் 7 ஆம் திகதி கொழும்பில் இடம் பெறவுள்ளதாக யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது.

இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க சமூகவியல் பகுதியின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக் கழக நூலகர் எஸ் முருகவேள் 'இந்திய ஆயுர்வேத வைத்திய சாஸ்திர நூல்கள் ஓர் அறிமுகம்' என்னும் பொருள் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கருத்துரை வழங்குவார்.

யானைகள் மூலம் சவர்க்கார விற்பனை

அண்மையில் பம்பாயிலுள்ள இரு சவர்க்கார நிறுவனங்கள் தமது உற்பத்திகளை விநியோகிப்பதற்குப் போட்டி போட்டுக் கொண்டன.

இதன் உச்சக்கட்டமாக ஒரு கம்பனியினர் மற்றைய கம்பனி வாசலில் நின்று தமது சவர்க்காரத்தை விநியோகித்தனர்

இதனை கண்ணுற்ற மற்றைய கம்பனியினர் தமது சவர்க்காரத்தை மற்றைய கம்பனி வாசலில் வைத்து யானைகள் மூலம் வழங்கினர்.

இதனை பார்ப்பதற்கு மக்கள் கூட்டம் திரண்டு விட்டது. போக்குவரத்து தடைப்பட்டது. (22)

லெபனானிலுள்ள இலங்கையர் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள்

லெபனானில் தொழில் பார்க்கும் இலங்கையர் எவரும் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது,

"சுமார் 30 ஆயிரம் இலங்கையர்கள் தற்பொழுது லெபனானில் தொழில் பார்த்து வருகின்றார்கள். இவர்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை— அவர்கள் கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படும் சூழ்நிலையும் இல்லை— வெளிநாட்டு தொழிலாளர்களை லெபனானுக்குள் தருவிக்கும் முகவர் நிலையங்களின் செயற்பாட்டுக்கு மட்டும் அங்குள்ள அரசு தடைவிதித்துள்ளது இது தற்காலிகத் தடையே"

இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

விவசாயக் கண்காட்சி

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் விவசாயக் கண்காட்சி ஒன்று வெகுவிரைவில் நடத்தப்படவுள்ளது. (18)

பார்வையிழந்தவருக்கு 'நடன மயூரா' விருது

இந்தியாவிலுள்ள ரமண மகரிஷி ஆசிரமத்தில் 300 பார்வை இழந்தவர்கள் உள்ளனர்.

இவர்களுள் ஒருவரான பூஜா வெடா ராமாயண நாட்டிய நாடகத்தை திறம்பட நடித்துக்காட்டி நடன மயூரா விருது பெற்றுள்ளார் இந் நாடகம் கடந்த ரமநவமியன்று மேடையேற்றப்பட்டது இவருடன் இன்னும் சிலர் நாடகத்தில் நடித்தனர் இவர்கள் மேடையேறுவதற்கு இவர்களுக்கு சிலர் கை கொடுத்து உதவினர் ஆசிரமத்தில் இவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகிறது கம்பியூட்டர் பயிற்சி கூட வழங்கப்படுகிறது. 22

உள்ளூர் பொருள்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்க பயிற்சி

யாழ் மாநகராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலைப் பிள்ளைகள் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனை ஓரளவாயினும் நிவர்த்தி செய்யும் முகமாகப் பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் தாய்மாருக்குஉள்ளூரில் கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்கும் வழிகள் பற்றிய செயல்முறை சுகாதாரக் கல்வி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

"யுனிசெவ்" உதவியுடன் யாழ் மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டப் பிரிவினால் முதற்கட்டமாக 6 வகுப்புகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் தவணை பொதுப் பரீட்சை

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாந்தவணைப் பொதுப் பரீட்சை ஜூலை மாதம் 20 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. (18

தரப்படுத்தலை மீண்டும் அறிமுகம் செய்யாதீர்கள் எனக் கோரிக்கை

1990 ஆம் ஆண்டு ஏனைய மாவட்டங்களில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையையும், இதே பரீட்சை 1991 இல் விசேட பரீட்சையாக வடக்கில் நடத்தப்பட்டதற்கும் பல்கலைக்கழக பிரவேசத்திற்கு வேறுபட்ட இரு பரீட்சையாகக் கருதப்படும் என்ற கல்வி அமைச்சரின் அறிவிப்பை தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

இவ்வாறு யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்முறையிலும் தரப்படுத்தலை 'மீண்டும் அறிமுகப்படுத்தாது கடந்த வருடங்களில் நடைமுறைப்படுத்திய முறையினைத் தொடர்ந்து செயற்படுத்துவீர்கள் என பூரணமாக நம்புகிறோம் என்றும் அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சுப்புலக்சுமி பிணை வழக்கிற்கு தமிழக அரசுக்கு அழைப்பாணை

தடாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் திருமதி. சுப்புலக்சுமி அவரது கணவர் ஜெகதீசன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரது பிணை வழக்கில் தமிழக அரசுக்கு அழைப்பு ஆணை அனுப்புமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இருவார காலத்திற்குள் இதற்குப் பதில் பெறும் படியும் இந்தமனுவை விசாரித்த நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

இம் மூவரையும் கைவிலங்கிட்டு அழைத்துச் செல்லக் கூடாது எனவும் மதுரை, சென்னை மத்திய சிறைச்சாலைகளின் கண்காணிப்பாளர்களுக்கு நீதிபதிகள் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

திருமதி சுப்புலக்சுமி சிறைச்சாலை விதிகளுக்கு உட்பட்டு அவரது கணவரை சிறையில் சந்திக்க அனுமதிக்கலாமென்றும் மற்றொரு மனுமீது நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளனர்.

ஒருமுறை பரீட்சை எடுத்தவர்களுக்கும் இலவச சீருடை வழங்க கல்வியமைச்சு முடிவு

க. பொ. த. சாதாரண உயர்தர பரீட்சைகளை ஒரு முறை எடுத்து முடிவுகளை எதிர் பார்த்துள்ளோருக்கும் இலவச சீருடை வழங்கப்படும்.

இச்சீருடைகள் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்கு அறுவகைப் பிரிவாக பிரித்து பொதிகளாக விரைவில் ஒவ்வொரு பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப் படவுள்ளது.

ஆரம்ப ஆண்கள் ஆரம்ப பெண்கள், மத்திய ஆண்கள் மத்திய பெண்கள் உயர்தர ஆண்கள் உயர்தர பெண்கள் என அறுவகை பிரிக்கப்படும்.

தரம் 1 தொடக்கம் 9வரை உள்ள ஆண்களுக்கு கட்டை காற் சட்டை சேட்டுக்கான துணிகளும் ஆண்டு 10 — 14 வரை ஆண்களுக்கு நீளக் காற்சட்டை சேட்டுக்கான துணிகளும் அனுப்பிவைக்கப்படும்.

இவ்வாறே பெண்களுக்கும் வயதுக்கேற்றவாறு வெள்ளைத்துணிகள் வெட்டப்பட்டு பொதிகள் பண்ணப்பட்டு அனுப்பி வைக்கப்படும்

மேற் கூறிய தீர்மானங்கள் 8 6. 92 இல் கல்வி அமைச்சின் இலவச சீருடை வழங்கல் தொடர்பாக பிரதேச கல்விப் பணிப்பாளர்கள் கோட்டக் கல்விப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது 15

● ஜெயலலிதா மீது குற்றச்சாட்டு

பிரமுகர்களின் பாதுகாபபிற்கே தமிழக பொலிஸ் பயன்படுகிறது

முக்கிய அரசியல் பிரமுகர்களின் பாதுகாப்பிற்கென தமிழக பொலிஸார் பயன்படுத்தப்படுவதால் பொலிஸாரின் வழமையான பணிகள் தமிழ் நாட்டில் பாதிப்படைந்துள்ளதாக சென்னை ஆங்கில பத்திரிகை ஒன்று குற்றஞ்சாட்டியுள்ளது.

இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள முதலமைச்சர் ஜெயலலிதா, பிரமுகர்களின் பாதுகாப்பிற்கென நன்கு பயிற்சி பெற்ற தனி பொலிஸ் பிரிவு உள்ளதாகவும் இப் பத்திரிகையின் குற்றச்சாட்டு விஷமத்தனமானது. எனவும் அறிக்கை விடுத்துள்ளார்.

பேராசிரியர்...

நோக்கம் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன

பேராசிரியர் பீற்றர் ஷோக் பல தடவை யாழ் வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (22)

அரசின்...

ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்

1990 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப்பரீட்சை, 1991 ஏப்ரல் விசேட பரீட்சை என்பனவற்றை தனித்தனியே கணித்து புள்ளியிடப்படும் எனவும் பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி உயர்த்திக் கணிக்கப்படும் என உயர் கல்வி அமைச்சு முடிவுசெய்துள்ளது தெரிந்ததே.

1970 ஆம் ஆண்டில் அப்போதைய அரசு அறிமுகம் செய்த தரப்படுத்தல் முறையினால் தமிழர்களின் கல்விச் சுதந்திரம் முதன்முதலாக பறிக்கப்பட்டதை கவலையுடன் தொடர்பான வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன

(15,22)

தமிழீழ காவல் துறை

பதவி வெற்றிடம்

காவலர் / உபபரிசோதகர் பதவிகள்

கல்வி:- 1. காவலர் - க. பொ. த. சாதாரணம்
2. உபபரிசோதகர் - க. பொ. த உயர்தரம்
உயரம்;- 5 அடி 6 அங்குலம்
வயது;- 18 முதல் 30வரை

மேற்படி தகைமையும் நல்ல தேகக்கட்டும். திடகாத்திரமும் உள்ள விண்ணப்பதாரிகள் 25-06-1992 வியாழன் காலை 9.00மணிக்கு நாவலர் வீதியிலுள்ள காவல் துறை அலுவலகத்திற்கு சான்றிதழ்களுடன் சமுகம்தரவும்.

பொறுப்பாளர்,
தமிழீழ காவல் துறை.
23 - 06 - 1992

06058

பாதிக்கப்பட்ட...

மிகுதியானவர்களுக்கு இந்த உதவித்தொகையை வழங்குவதற்கு இதுவரை புனர்வாழ்வு அமைச்சினால் செயலகத்துக்கு எவ்வித பணமும் அனுப்பிவைக்கப்படவில்லை

இதேவேளை இராணுவ நடவடிக்கையால் காயமடைந்த, ஊனமுற்ற, இறந்தவர்களின் விண்ணப்பங்கள யாழ். செயலக புனர்வாழ்வுக்கிளையில் நூற்றுக்கணக்கில் தேங்கிக்கிடக்கின்றன,

எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் புனர்வாழ்வு புனரமைப்பு தொடர்பான விசேட கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து யாழ். அரசாங்க அதிபர் பிரஸ்தாபிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக வெளிநாடுகளில் இருந்து பெருமளவு நிதியுதவி அரசுக்கு கிடைப்பது தெரிந்ததே. 47

என்னைக் கவிழ்ப்பதற்கு அ.தி.மு.கவினுள் ஒருபிரிவினர்சதி

— முதல்வர் ஜெயலலிதா

அ.தி.மு.கவிலுள்ள சிலர் காங்கிரஸ் கட்சிக்காரர்களுடன் சேர்ந்து தன்னைக் கவிழ்க்க முயல்வதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்

"அரசியலில் இணக்கமான நல்லுறவு என்பதெல்லாம் நிலையானதல்ல. காங்கிரஸ் காரர்களுடன் சேர்ந்து கொண்டு என்னைக் கவிழ்க்க அ.தி.மு.க வின் ஒரு பிரிவினரே சதி செய்கிறார்கள். கொலைப் பட்டியலில் நான் இருப்பதனால் என்னைப் பாதுகாக்க பாதுகாப்புக் கவசம் அணிந்துள்ளேன்" எனவும் ஜெயலலிதா கூறியுள்ளார்.

தமிழீழத்தை...

முயற்சிக்கப்படுகிறது.

இணைப்பை தடுக்க வேண்டுமாயின் கிழக்கில் புலிகளின் ஆதிக்கத்தை தடுக்க வேண்டும் என இராணுவம் கருதுகிறது.

இதே சமயம் வடக்கில் மணலாற்றில் படையினரின் குறுக்கு வேலியை புலிகள் தமது பலத்தை திரட்டி உடைத்து விடுவர் என்பதால் குடாநாட்டிலிருந்து மணலாறுக்கு உதவி சென்றடைவதை தடுக்க இராணுவம் விரும்புகிறது.

இதற்காக குடாநாட்டை இணைக்கும் கொம்படி வெற்றிலைக்கேணி, ஆனையிறவு பகுதியை ஊடறுக்கும் வகையில் இராணுவ வேலியை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது தெரிகிறது என விடுதலை புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்திய...

நேற்றுக்காலை6மணியளவில் குறிப்பிட்ட இந்த இந்தியன் ஏயர்லைன்ஸ் விமானம் டில்லி புறப்படத் தயாரான போது அதில் இயந்திரக்கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது சீர்செய்யப்பட்டு விமானம் ஓடுபாதைக்கு சென்று புறபடுவதற்கு தயாரானது.

அப்போது தொலைபேசியில் இந்த விமானத்தில் குண்டு வைக்கப்பட்டதாக அநாமதேய தகவல் ஒன்று கிடைத்தது.

இதைத்தொடர்ந்து விமானத்திலிருந்து பயணிகள் அவசரமாக இறக்கப்பட்டு விமானம் ஓரமான பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டு சோதிக்கப்பட்டது

இதுபின்னர் புரளி என அறியப்பட்டு நண்பகலின் பின்னரே விமானம் டில்லிக்கு சென்றது

இதனிடையே தமிழகம் வந்த ஜனாதிபதி வெங்கட்ராமன் நேற்றுக்காலை புறப்படவிருந்த இந்திய விமானப் படை விமானத்தில் இயந்திரக்கோளாறு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது

இதனையடுத்து மற்றுமோர் இந்திய விமானப்படை விமானம் ஒன்று டில்லியிலிருந்து அழைக்கப்பட்டு நேற்றுப்பிற்பகலே அவர் டில்லி சென்றார்.

வீரச்சாவு

கட்டைக்காட்டில் நேற்றுக் காலை நடந்த மோதலில் சுரேஷ் (க. சிவராஜா அம்பாறை) வீரச்சாவு அடைந்தார். பெண்ணாலையில் இடம் பெற்ற எதிர்பாரா வெடி விபத்தில் 2 ஆம் லெப், கவிகாமுனி (ஜே. ரேனா ஷா யாழ்ப்பாணம்) வீரச்சாவு அடைந்தார்.

மணலாறு...

பில் பகுதிக்கு வந்த படையினர் மீண்டும் முல்லைத்தீவு தளத்திற்கோ அல்லது மணலாறு நோக்கி நகரவோ முடியாத திரிசங்கு நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

மணலாறை என்ன விலை கொடுத்தேனும் கைப்பற்ற இராணுவத் தலைமை தீவிரமாக உள்ளது. வடக்கு கிழக்கை பிரிக்க மணலாறு இராணுவ மயமாக்கப்பட வேண்டும் இதற்கென மீண்டும் மீண்டும் படையெடுப்பை இராணுவம் நடத்துகிறது.

படையெடுப்புகளை தீவிரமாக முறியடித்து வரும் மணலாறு புலிப் போராளிகள் தமிழீழத்தின் இருதயத்தை பாதுகாப்பதாக கருதியே போரிடுகின்றனர் என புலிகளின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டுகிறது.

அரசியல்

பேரினவாதம் ஏற்க தயாரில்லை என்பதை காட்டுகிறது வடக்கு கிழக்கு பிரிக்க முடியாத தமிழர் தாயகமாகும்

இவ்வாறு புலிகளின் அதிகாரபூர்வ பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 40 வருட வரலாற்றில் குறிப்பாக கடந்த பதினான்கு கால நிகழ்வுகள் எமக்கு ஓர் வரலாற்று உண்மையை உணர்த்துவதாக கூறும் அப்பத்திரிகை தமிழர் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான, அமைதியான நிரந்தரமான, தமிழர் அபிலாசைகளை பூர்த்தி செய்வதான ஓர் நியாயமான தீர்வை சிங்கள பேரினவாதம் என்றுமே தரப்போவதில்லை என்பதே எனச் சுட்டிக்காட்டுகிறது

எம் அரசியல் உரிமையை வென்றெடுக்க நாம் தான் போராட வேண்டும் நாம் போராடியே எமது தன்னாட்டு உரிமையை நிலைநிறுத்த முடியும் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை தலைமையகம்

தையல் பயிற்சி ஆசிரியைகள்

யாழ்ப்பாணம், கரவெட்டி. நெடுந்தீவு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான, மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் தகைமையும், அனுபவமும் உள்ளோரிடமிருந்து. 04-07 92 வரை எம்மால் ஏற்றுக் கொள்ளப்படும். 06 - 07 - 92 காலை 10,00 மணிக்கு எமது பணிமனையில் நேர்முகப்பரீட்சைக்கும், செய்முறைப் பரீட்சைக்கும் சமூகம் தரவும். தனித்தனி கடிதங்கள் அனுப்பபடமாட்டாது,

ச சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
21 - 06 - 92.

06056

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 24-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது